## ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இல. 01**

மேற்குறித்த கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுத் தொகுதியுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிதிக்கூற்றுக்களில் முறையாக கூறுகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே பந்தி இல. 21 (உ) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பாதீடு செய்யப்பட்ட தரவுகள் உள்ளபடியான தரவுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

2000 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளிலிருந்து பிரமுக வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 9,725,000 தொகைக்காக 2012 திசெம்பர் 05 ஆம் திகதி இந் நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த தொகுதிக்கடன் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் 2004 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய வட்டியும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிலையத்திடமுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி வெவ்வேறாக மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் காணி தொடர்பாகவும் ஐந்து சதவீதம் பெறுமானத்தேய்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 இணக்கம் செய்யப்பட்டிராத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2011 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கம் மற்றும் மிகைக் கணக்கின் மீதி ரூபா 32,294,360 ஆன போதிலும், வருமானச் செலவினக் கூற்றில் அப் பெறுமதி ரூபா 32,977,609 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 1,005,395 கூட்டுத்தொகையான அட்டுறு செலவினம் தொடர்பான நாட்குறிப்பு, நாட்குறிப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிராததுடன் உரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர்.ஜெயவர்தன நிலைய அதிகாரச்சட்டம் | |
| (i) 1 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலையத்தின் பெயர் ''ஜே.ஆர். ஜெயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிகள் மற்றும் நூலக நிலையம்'' ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஜே.ஆர். ஜெயவர்த்தன |

| | | |
|---|---|---|
| | | நிலையம்'' எனவும் நிலையத்தில் பயன்படுத்தப்படும் கடிதத் தலைப்புகளில் ''ஜெயவர்த்தன கலாச்சார மையம்'' எனவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 3(ஒ) ஆம் பிரிவு | 2009 சனவரி 25 ஆம் திகதி கட்டுப்பாட்டுச் சபையின் இரண்டு அங்கத்தவர்களின் பதவிக் காலம் முடிவுற்றிருந்ததுடன் 2012 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரை கட்டுப்பாட்டுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக நிர்வாக சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5:3:1 ஆம் பந்தி மற்றும் 5:8 ஆம் பந்தி | 2012 ஆகஸ்ட் மாதம் முதல் நிலையத்தின் உத்தியோகபூர்வ இல்லம் செயலாளர் நாயகம் குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக வாடகை அறவிடப்பட்டிராததுடன் உத்தியோகபூர்வ இல்லத்திற்காக நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் நிலையத்தால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இக் கட்டணம் உரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 573,779 ஆன மிகையானதுடன் முன்னைய ஆண்டின் இதற்கு ஒப்பான மிகை ரூபா 1,204,230 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 630,451 தொகையான வீழ்ச்சிக்காக பழுதுபார்த்தல் மற்றும் வழங்கல் செலவினம்

முறையே ரூபா 2,348,467 ஆலும் ரூபா 345,633 தொகையாலும் அதிகரித்தமையும் நிலையான வைப்பு வட்டி ரூபா 1,790,078 ஆல் அதிகரித்தமையும் விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 630,451 ஆல் அதாவது 52 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. முக்கிய வருமானச் செலவின முரண்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2012 ரூபா | 2011 ரூபா | முரண் ரூபா | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| நிலையான வைப்பு வட்டி | 8,984,315 | 7,194,237 | 1,790,077 | 25 |
| நானாவித பெறுவனவுகள் | 105,107 | 29,900 | 75,207 | 252 |
| **செலவினம்** | | | | |
| வழங்கல் செலவினம் | 2,920,896 | 2,575,263 | 345,633 | 13 |
| பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புச் செலவினம் | 3,732,279 | 1,383,812 | 2,348,467 | 170 |

## 3. செயற்பாடு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

1994 யூன் மாதம் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக, திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செயலாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரம் விசேட படிப்பணமாக நிலையத்தின் நிரந்தரப் பதவியணியின் 27 பேருக்கு ரூபா 131,500 தொகையும் தற்காலிகப் பதவியணியின் மூன்று பேருக்கு ரூபா 6,500 தொகையும் வெளித்தரப்பினரான பாதுகாப்புப் பிரிவிற்கு ரூபா 7,500 தொகையும் 2012 திசெம்பர் மாதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி 2523 ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 49,020 தொகை காசேட்டில் ரூபா 47,020 ஆகப் பதியப்பட்டிருந்ததுடன் ரூபா 2,000 தொகை குறைத்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3.3 ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகளுக்காக நிதியம் ஒன்றை உருவாக்கல்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,185,097 தொகையான பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டுத்திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையத்தின் தூரநோக்கையும் செயற்பணியையும் மேற்கொள்வதற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டுத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கொள்வனவுத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 4,864,664 தொகையான நடைமுறையற்ற சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

2002 ஆம் ஆண்டின் பின்னர் நிலையத்தின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்**

2012 செப்தெம்பர் 19 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் தொடர்பாக குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் துணைக் கம்பனியில் ரூபா 5 மில்லியன் முதலீடு செய்யப்பட்டமை தொடர்பான ஓர் அறிக்கை கணக்காய்விற்கு ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்டோபர் மாதம் வரை அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் செயலாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

(அ) காசும் வங்கியும்

(இ) பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும்